சகல விதமான பள்ளிக்கூடப் புஸ்தகங்களுக்கும், இதர நூல்களுக்கும் உபகரணங்களுக்கும் உன்னதமான நிலையம்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

# இந்துசாதனம்

செவ்வாய், வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்,
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 19/300 of 1939

வெளிவந்துவிட்டது ... ... வெளிவந்துவிட்டது
"ஆரோக்கியமும் நேகாபயிற்சியும்"
ஆக்கியோன்:
உ. S. V. M. சபாரத்தினசிங்கம் B.A.
நான்காம், ஐந்தாம் வகுப்புகளுக்குரியது
விலை ரூபா 1.
எல்லாப் புத்தகசாலைகளிலும், சைவப்பிரகாச யந்திரசாலையிலும் பெறலாம்.
[Std. 46. 2-4—30-4-49.]

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் திகதி ஆரம்பமானது.

[ புத் — ௬0 ] யாழ்ப்பாணம்:— சர்வதாரி ௵ மார்கழி ௴ ௨௧ ௳ (1949 ஜனவரி 4 செவ்வாய்க்கிழமை) [ இல. — ௭௩. ]

சைவ சித்தாந்த மகா சமாஜம்

நாற்பத்திமூன்றாம் ஆண்டு நிறைவுவிழா

## சைவர் மகாநாடு, யாழ்ப்பாணம்

### திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ. பி. எல். (27-12-48 ல்) நிகழ்த்திய தலைமைப் பேருரை

(முற்றொடர்)

முதல் இராஜ ராஜ சோழன் மகன் "கங்கைகொண்ட சோழன்" என்ற புகழ்ப்பெறும் முதல் இராஜேந்திரன். இவன் காலத்தில் சோழமன்னர் ஆதிக்கம் உச்ச நிலையிலிருந்தது. ஈழம் முழுமையும் அவன் ஆட்சியில் இருந்தமை பல கல்வெட்டுக்களாலறியப்படும். "மாதோட்டமான ராஜ ராஜ புரத்துத் திருவிராமீஸ்வரமுடைய மாதேவர்க்கு உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் பெருந்தனத்துப் பணிமகன் ... ... சந்தி விளக்கு', என்ற (S. I. I. iv. 1414) சாசனத்தால், மாதோட்டத்தில் இராமீசுவரம் என்ற சிவாலயம் இருந்ததெனத் தெரிகின்றது. இது இவனால் கட்டப்பெற்றதாக இருக்கலாம். இவன் கி. பி. 1023 ல் ஈழத்தைப் படையெடுத்துப் பற்றியதோடு, நான்காம் மஹிந்தோ என்ற சிங்கள மன்னனையும் சிறைபிடித்துப் பொலந்நறுவையில் தனது பிரதிநிதி ஒருவனை ஆட்சி புரியும்படி அமர்த்தினன் என்று Tennent கூறுகிறார். ஈழத்தின் தலைநகராகிய பொலந்நறுவையின் உண்மையான பெயர் "புலநரி" என்பதை ஒரு கல்வெட்டு (S. I. I. iv. 1395) தெரிவிக்கின்றது. கங்கைகொண்ட சோழனுடைய பேரன் அதிராஜேந்திரன் கல்வெட்டுகள் பல (S. I. I. iv. 1388-1395) இப்புநகரியிற் கிடைத்துள்ளன. இவன் இத்தலைநகரிலேயே சோழ அரசப் பிரதிநிதியாக வாழ்ந்தான் என்று முதலியார் இராசநாயகம் கருதுகிறார். இவன் இந்நகருக்கு ஜனநாதமங்கலம் என்று பெயரிட்டு, வானவன் மாதேவீச்சரம் என்ற சிவாலயத்தை எடுப்பித்து, அதில் அழகிய மணவாளர் முதலிய பல திருவுருவங்களை எழுந்தருளுவித்தான். இச் சிவாலயம் சிதைந்த நிலையில் இன்றும் காட்சியளிக்கின்றது. இங்கிருந்து அகழ்ந்தெடுக்கப்பெற்ற சைவ சமய குரவர் நால்வர் முதலியோர் விக்கிரகங்களின் பேரழகை கொழும்பு கண்காட்சிச்சாலையில் காணலாம். Kalpe Korale என்ற வரியில் Etakada என்ற இடத்தில் உத்தம சோழேச்சரம் என்றொரு சிவாலயம் இருந்தமையும், அதில் ஒரு நந்தா விளக்குக்காக இருபது பசுக்களும், ஐந்து சந்தி விளக்குகளுக்குமாக ஐம்பது தென்னை மரங்களும் மூலதனமாக விடப்பட்டமையும் ஒரு கல்வெட்டால் (S. I. I. iv 1411) அறியப்படுகின்றன.

திருக்கோணமலையில், ஆயிரக்கால் மண்டபம் முதலிய பல அங்கங்களோடு கூடிய சிவாலயத்தைக் "குளக்கோட்டன்" என்ற சோழ அரசகுமாரன் கட்டுவித்த செய்தியைக் கவிராஜவரோதயனூர் இயற்றிய பழம் பாடல் தெரிவிக்கின்றது. இதன் மொழிபெயர்ப்பு 1831 ௵ நவம்பர் மாதப் Ceylon Government Gazetteல் வெளிவந்துள்ளது. இங்குள்ள பாறையில் காணப்படும் கல்வெட்டைப்பற்றிய ஆராய்ச்சியை முதலியார் இராசநாயகம் தமது நூலில் (I. 79 – 81) வெளியிட்டுள்ளார். இத்தலத்தில் இப்போது தை மாதத்தில் ஒருநாள் சிறப்பு விழா நடக்கிறது. சுந்தர பாண்டியன் ஈழத்தை கி. பி. 1246 ல் வென்று, வெற்றிக் குறியாகப் பொறித்த மீன முத்திரை திருக்கோணமலையிலுள்ள Frederick கோட்டை வாயிலின் நிலைக்கல்லில் இன்றும் காட்சியளிக்கின்றது. கந்தவனம், கீரிமலை, மாவிட்டபுரம், யாழ்ப்பாணம் முதலிய பல இடங்களிலுள்ள ஆலயங்கள் தமிழ்ப் பெருமக்களால் கட்டப்பெற்ற வரலாற்றைப் பாக்கக் காணுமிடம் முதலியார் இராசநாயகம் நூலேயாகும். விஜயபாகு என்ற சிங்கள மன்னன் கி. பி. 1071-ல் சோழரிடமிருந்து ஈழத்தை மீட்டுக்கொண்ட பிறகு, சோழராட்சி ஈழத்தில் தலையெடுக்கவில்லை.

தமிழ்மக்கள் ஈழத்தைச் சுறண்டுவதைத் தொழிலாகக் கொண்டார்கள் என்று எண்ணுவது பெருந்தவறு. ஈழ நாட்டில் பஞ்சத்தைத் தவிர்த்த பெருமை தமிழ் வள்ளல்களுக்குண்டு. கவிச் சக்கரவர்த்தி கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் ஆயிரம் கப்பல்களில் நெல் அனுப்பி ஈழத்திலிருந்த பஞ்சத்தைப் போக்கடித்த பெருங் கொடை வன்மையை,

... "நெல்லின் மலைகோடி கண்டிநாடு [கரைசேரக்
கூனர்க்கப்பலாயிரத்திற் கொடுபோ [யளித்த கொடைத் தடக்கை
மாறுகரன் சங்கரன் சடையன் வளம் [சேர்சோழமண்டலமே"

என்று சோழமண்டல சதகம் புகழ்கின்றது. ஈழத்திற் கிடைக்காத எண்ணிறந்தநாகரிகப்பொருள்கள் (Consumer Goods) தமிழகத்திலிருந்து தங்குதடையின்றி வந்தன.

சங்க நூல்களுள் ஈழத்தைப் பற்றிய குறிப்புக்கள் நிரம்ப வுள்ளன. சிலப்பதிகாரம் வரந்தரு காதையுள் (30. 160) "கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்" குறிக்கப்படுகிறான். இவன் ஈழத்தைத் தமிழரிடமிருந்து கி. பி. 113-ல் மீட்ட கஜபாஹு ஆவான். இதிலிருந்து சிலப்பதிகாரத்தின் காலமும் சேரன் செங்குட்டுவன் காலமும் நிர்மாணிக்கப்படுகின்றன. இவ்வேந்தன் ஈழநாட்டில் கண்ணகியாகிய பத்தினித் தெய்வத்துக்கு "நாட்பலி பீடிகைக் கோட்டமுந் துறந்தாங்கு, அரந்தை கெடுத்து வரந்தரும் இவளென, ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர், பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப, மழைவீற்றிருந்து வளம் பல பெருகிப், பிழையா விளையுளாயிற்று" என்று இந்நூல் உரைபெறு கட்டுரை கூறுகின்றது. சிங்கள மக்களால் இன்றைக்கும் இத்தெய்வம் "பத்தினித் தெய்யோ" என்ற பெயரோடு வணங்கப்படுகின்றது. மணிமேகலை பாத்திரம் பெற்ற காதையில் (11 - 21 - 23) 'இரத்தின தீவத்து, ஓங்குயர் சமந்தத்து சிமிசை, அறவியங் கிழவோன் அடியிணை" கூறப்படுகிறது. இக்குறிப்பில் இரத்தினத் தீவமென்பது இலங்கை, சமந்தமென்பது Adam's Peak, அறவியங் கிழவோன் அடியிணை என்பது இம்மலையிலுள்ள புத்தர் பெருமான் அடிச்சுவடு. கௌதம புத்தர் ஈழத்துக்கு மும்முறை வந்த செய்தியை "மகாவமிசம்" கூறுகின்றது. பட்டினப்பாலை (அடி 191 ல்) சோழன் கரிகாற்பெருவளத்தான் காலத்தில் ஈழத்துணவு செல்வளித்த சோழவழநாட்டில் புகார்த் துறைமுகத்தில் இறக்குமதியான செய்தி காணப்படுகிறது. பெரும்பாலும் சோழநாட்டில் கிடைத்தற்கரிதாகிய பனங்கிழங்கு அல்லது பதப்படுத்திய பனம் பழச்சாறாக இவ்வீழத்துணவு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம். பெருங்கதை (உஞ்சைக்காண்டம், சயந்தி புக்கது, அடி 37ல்) "இலங்கை ஈழத்துக் கலந்தரு செப்பும்" யாப்பருங் கலவிருத்தியில் (செய். சூ 9. மேற்) "ஈழத்துத் தச்சன் கடைந்த இணைச் சீசெப்பும்" கூறப்படுவதால், ஈழத்திலிருந்து செம்பினால் செய்யப்பட்ட பலவகையான பாத்திரங்களும் பொருள்களும் தமிழ்நாடு போந்தன என்பதும், ஈழத்துத் தச்சர்கள் செப்புக் கடைதல் வேலையில் நிபுணர்கள் என்பதும் தெளிவாகின்றன. அநுராசபுரத்திலுள்ள செப்பரண் மனையில் (Brazen Palace) செப்புவேலை நட்பம் மிகுந்திருந்தது. புஜல் ராஜன் கி. பி. 389 ல் அட்டனகல்லாவில் ஒரு அரண்மனையில் பொன்பூசிய செப்போடுகளால் கூரை வேய்ந்தது, விளக்குகளும் பெரியதொட்டிகளும் யானைக் கவசங்களும் செம்பினால் செய்யப்பட்டது முதலிய செய்திகள் ராஜாவளி, ராஜரத்னகரி என்ற சிங்கள நூல்களிற் காணப் படுகின்றன. மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவர்கள் ஈழத்துப் பூதன் தேவனார் என்பவர் எட்டுத் தொகையுள் ஏழுபாடல்களை இயற்றினார். [அகநானூறு 88, 231, 307, குறுந்தொகை 189, 343, 360 நற்றிணை 366] வேறு சில பல குறிப்புக்களும் உள; விரிவஞ்சி விடுக்கின்றேன்.

9 தேவார முதலிகள் மூவருள் இருவர் அருளிச்செய்த மூன்று பதிகங்கள் ஈழநாட்டுத் தலங்கள் இரண்டிற்கு முள்ளன. திருக்கேதீச்சரத்திற்கு திருஞான சம்பந்தரும் நம்பியாரூரரும் பாடிய் பதிகங்கள் ஒவ்வொன்றும், திருக்கோணமலைக்குத் திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்றும் தமிழகத்திலுள்ள வேறு பாடல் பெற்ற தலங்களோடு இவ்விரண்டையும் சேர்த்து எண்ணும் பெருமையை இத்தலங்களுக்கு அளித்தன. போர்த்துக்கேசியர் அட்டூழியத்தால் இத்தலங்களி லிருந்த பழங்கோயில்கள் இப்போதில்லை. இருங்கடற்கரையினில் எழில்திகழ் மாதோட்டம், வரையுமம்பொழில் மதிகள் கரிப்பறு மருவிய மாதோட்டம், வண்டுபண் செயுமாமலர்ப்பொழில் மஞ்ஞை நடமிடு மாதோட்டம், மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர், மாதோட்டத் தெல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம், மாதோட்டத் தத்தர் மன்னு பாலாவியின் கரையிற் கேதீச்சரம் என்று காழிச்செம்மலும், வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில் பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சரம், பரிய திரை எறியவரு பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சரம் தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரம் என்று நம்பியாரூரரும் கூறுவதிலிருந்து திருக்கேதீச்சரத்தின் வனப்பு நமது அகக் கண்ணுக்குப் புலனாகின்றது. கரைகெழு சந்தும் காரகிற் பிளவும் அளப்பரும் கனமணி வரன்றிக் குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை, செழுங்கடல் தரளம் செம்பொனும் இப்பியும் சுமந்து கொழித்து வன் திரைகள் கரையிடைச் சேர்க்கும் கோணமாமலை, விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கைவண் செருந்தி செண்பகத்தின் குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமாமலை என்ற தொடர்கள் திருக்கோணமலையின் பெருமையை விளக்குகின்றன. அருணகிரிநாதர் ஈழநாடு போந்து திருக்கோணமலையின் மேலிருந்த முருகப்பெருமானைத் தரிசித்து இரண்டு திருப்புகழ்ப் பாடல்களையும் [சமாஜப்பதிப்பில் 839, 1331 எண்களையுடையன] கதிர்காமத்து முருகவேளையும் தரிசித்து 25 பாடல்களில் பல குறிப்புக்களையும் அருளிச்செய்தார். 'கலகவாரி போல் மோதி வடவை ஆறு சூழ்ந்த கதிர்காம முதூர், கடகட அருவிகள் தவழ் அதிர்கதிர் காமத்தரங்கமலை, கரிய பூத்திரள் பலவின்மீதிற் சுளைக்கனிகள் பீறிப் புசித்து அமராடிக் கதலிசூழ் தென்றிசைப்பதியிலும் ஈழத்தினிற் கதிரகாமக்கிரி, அதுக்ர யானைபடும் ரத்னகிரிகோண சயிலத்துக் கதிர்காம, மணிதரள மணி வீசி அணி அருவி சூழமருவு கதிர்காமம், வனமுறை வேடன் அருளிய பூசைமகிழ் கதிர்காமம்' என்ற செய்யுட் பகுதிகள் கதிர்காமத்தின் குறிஞ்சிவளத்தைமெய்ப்பாட்டுச் சுவையோடு தெரிவிக்கின்றன. "இருசுடர் மீதோடா இலங்கை" என்று அப்பர் சுவாமிகள் கூறியது இன்றும் உண்மையாகவே யுள்ளது. மக்தயும் அறியா மான் பயிலடுக்குகளும், இருள்படப் பொதுளிய பராரை மரங்களும், கானமக்களும் கால் வைத்தறியாதடர்ந்த காடுகளும் (Virgin Forests) கதிரவன் வெப்பைக் களைந்தே விடுகின்றன.

தலைமையுரையெனத் தொடங்கி ஏதேதோ கூறுகிறேனென்று நீங்கள் எண்ண மாட்டீர்கள். தமிழகத்திற்கும் ஈழநாட்டிற்கும் பண்டு தொட்டே மொழி, சமயம், ஆட்சி, வாணிபம் நாகரிகம் முதலிய பல துறைகளிலும் இருந்து வரும் தொடர்பையே சிறிது விவரித்தேன். அக்காலத்திலிருந்து இன்று வரையில் இடையேயுள்ள கடல் தடையே செய்திலது. ஆகாய விமானங்களில் அந்தரக் கொட்பினராகப் பெருமக்கள் விரைந்து செல்லும் இக்காலத்தில், தடைக்கு இடமேது! இன்று ஈழநாட்டுத் தமிழ் மக்களுக்குத் தடைகளாகக் காணப்படுவன வெல்லாம், தமிழன்னையின் தண்ணருளால் விரைவில் நீங்குமென்றே நம்புகிறேன். இந்தியாவும் ஈழமும் முழு உரிமை பெற்ற நாடுகளாய் விட்டபடியால் இவற்றின் கூட்டுறவைக் குலைக்க எந்த வல்லரசும் முன்வராது. கூட்டுறவு வாழ்க்கையே சிறந்ததென இரு நாடுகளும் உணர்ந்தே தீரும். எல்லா மக்களோடும் கூடி வாழ்வதே தமிழ் மக்களின் இயற்கை. இவ்வியற்கையே வெற்றிபெறும்.

இனி, சைவ சமயத்தின் பழைமை, புதுமை, பெருமை முதலியன பற்றிச் சில கூறுதல் முறையாகும். உலகெங்கும் ஒரு காலத்தில் சைவம் பரவியிருந்தது, அதற்குரிய சின்னங்களைப்பற்றி 1944 ௵ நடைபெற்ற பள்ளத்தூர் மகாநாட்டுத் தலைமையுரையில் விளக்கினேன். சிந்துக் கரையில் மொஹஞ்சோதாரோ, ஹரப்பா என்னுமிடங்களில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற பல புதை பொருள்கள் சைவசமயத்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## தோத்திரம்

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிட்டுங் காணாத
கோலங் குருவடிவு கொண்டதால்— ஆலந்
தரித்தபிரான் சோணசன் ருன்முனிந்து வேளை
எரித்தபிரான் வந்தான் இதென்.

மனமே, கஞ்சைத் திருக்கண்டத்தி லடக்கியவரும் திருவண்ணாமலைப் பெருமானும் தாமே சினந்து (நெற்றிக்கண் நெருப்பினால்) மன்மதனை யெரித்தவருமாகிய இறைவர் ஆதிவராகம் (நிலத்தை யிடந்து) தேடியும் தோத்திரஞ் செய்தும் காண்டற்கரிய தமது சோதிவடிவத்தையே இப்பொழுது (சமியேனை ஆட்கொள்ளும் வண்ணம்) குருவடிவமாக்கி யெழுந்தருளிவந்துள்ளார், இது என்ன அற்புதம்! என்பது பொருள்.

கோலம் - பன்றி, கோலமுதல் - திருமால்கொண்டுள்ள ஆதிவராகமெனும் பன்றிவடிவத்தைக் குறித்தது; கூப்பிடுதல் - ஓலமிடுதல், தோத்திரம்பண்ணல்; தம் முன்னிலையிற் சென்ற மாரனை எரித்து அவனுக்கு மறக்கருணை புரிந்த அண்ணாமலை யப்பன், தம்மை மார்ச்சார சம்பந்தமாக ஆட்கொள்ளத் திருவுளம்பற்றித் தாம் இருக்குமிடக்கேடி வந்தருளிய வித்தையை விளக்க வேண்டி "கோலமுதற்றேடி ...கூப்பிட்டுங் காணாத கோலங் குருவடிவுகொண்டே வந்தானிதென்" என்றார். கோலமுதல் தேடிக்காணாத வரலாற்றைக் கந்தபுராணம் அடிமுடிதேடு படலத்திற் காண்க. (11)

## அருளிலார்க் கிவ்வுலகு மில்லை

அருளிலார்க் கவ்வுலக மில்லை ஏனெனில் அன்பே சிவம், அருளே அவ்வுலகம். ஆனால் பொருளிலார்க்கிவ்வுலகமில்லையென்பதுமாவையின் போதனையாகும். இப் பூவுலகில் கோடாகோடி மாந்தர்கள் பொருளைத் தேடாமலும் நாடாமலும் இயற்கை மாதா அளித்ததே போதுமென்று ஆனந்த சுகவாழ்வில் ஆழ்ந்திருக்கிறார்கள், அருளைப் பெற்ற தபோதனர் எல்லோரும் பொருளைத்தள்ளி அருளை நாடினவர்கள். திருவருளைப் பெறுவதற்குப் பொருள் வேண்டியதில்லை. கடவுளுடைய கிருபையிருந்தால் எல்லாமுண்டு. மனம், வாக்கு, காயம் இவை மூன்றையும் ஒரே நோக்குடையனவாய், ஈசுவரன்பாற் செலுத்திச் சதா அவனுடைய தியானத்தில் நம்மை மறப்போமானால் திருவருள் எமக்குப் பிரகாசிக்கும். திருவருட் சோதி பிரகாசிக்கவே இவ்வுலகமும் அவ்வுலகமாகிவிடும். உண்மையில் இவ்வுலகுஞ் சரி, அவ்வுலகுஞ் சரி, எல்லாவுலகமுமானவர் இங்குமுண்டு அங்குமுண்டு. இவ்வுலகில் திருவருளைப் பெறமுடியாதெனில் அதை வேறெவ்வுலகிலும் பெறமுடியாது. அதைப் பெறுவதற்கு நாம் இவ்வுலகைவிட்டு வேறெவ்வுலகுக்குஞ் செல்லவேண்டியதில்லை. இவ்வுலகிலிருந்தே அவ்வுலக சுகத்தை நாம் அனுபவிக்கலாம். ஆனால், இவ்வுலகம் நாக்கு இவ்வுலகமாகவே யிருந்தால் அவ்வுலக சுகத்தை நாம இவ்வுலகில் அனுபவிக்க முடியாது; ஆகையால் நாம்,

### இவ்வுலகத்தை நல்வுலகமாக்க வேண்டும்

இவ்வுலகில் ஒரு பொல்லாப்புமில்லை எனும் திடநம்பிக்கை முதல் நம்மிடமிருக்கவேண்டும். இதனை ஏதோ இழிவானதென்று மதிப்பிடுவதால் மனிதனும் இழிவை யடைகின்றான். உயிர்களெல்லாம் தெய்வம். உலகு முழுதும் பரிசுத்தம் என்னும் பூரணவிசுவாசம் அவனுக்கிருக்குமானால் அவனும் பரிசுத்தமாகித் தெய்வத்தன்மையைப் பெறுவான்.

இவ்வுலகம் பரிசுத்தமானதென்பதை யாரும் மறுக்கமுடியுமோ! இவ்வுலகிற் பாடல்பெற்ற தலங்கள் எத்தனையுண்டு? எம்பெருமானின் திருவிளையாடல்கள் எங்கே நடைபெற்றன? மாந்தர்கள் போற்றும் மகான்களெல்லோரும் வானுலகிற் றோன்றினார்களோ! எங்கே பூமியின்கண் ஐம்புலன்களை அடக்கியிருந்த பத்தர்கள் சிவத் தியானஞ் செய்தார்களோ அங்கே அவர்களுக்குத் தரிசனை கிடையாமலும் போனதோ! சித்தர்களும் முனிவர்களும் கைலாசமும் புவலோகத்தாரும் பூலோகத்தைத் தழுவியதாயிருக்கிறதோ வில்லையோ! இப் புண்ணிய பூமியில் தர்மங் குன்றுங் காலங்களில் அவதார புருஷர்கள் தோன்றி, மாந்தர் சம்சாரத்தை மறவாது அவர்களுக்கு வழிகாட்டி உலகின்கண் தர்மத்தை நிலைநிறுத்தி வந்திருப்பதை உலகம் அறியாதோ? மானிட வடிவெடுத்தும் தெய்வத்தின் குணங்கள் பொருந்திய புண்ணிய புருடரும் மகான்களும் இப் பூவுலகில் எப்போதும் இப்போதும்இல்லாமலுமுண்டோ? இவர்களின் தர்சனையாலன்றோ இவ்வுலகமும் அவ்வுலகமாகின்றது. நாம இவ்வுலகிற் பிறவியெடுத்தது வினையைப் போக்குவதற்கு மாத்திரமல்ல, வினையைப் போக்கி அருளைப் பெறுவதற்காகவே.

### இவ்வுலகில் மாத்திரமே ஈசுவரனின் அருளைப் பெறலாம்

ஈசுவரனின் அருளைப் பெறமுடியாவிடில், இவ்வுலகிற் பிறப்பதினால் ஒரு சுகமுமில்லை. ஆகையால்தான் அருளிலார்க் கிவ்வுலகமுமில்லை. மனிதன் தனக்குள்ளேயுள்ள தெய்வத்தை வானத்திலும் கானகத்திலும் தேடியலைகின்றான். எங்கள் பரமபிதா எங்களுடனிருக்கிறார். உலகம் எல்லாம் இறைவனது சந்நிதானம். மாந்தர் எல்லோரும் ஒரே குலத்தவர்கள், ஒரே சாதியார், ஒரே சுதந்தரமுடையவர்கள்; ஒரே மதத்தவர்கள். செல்வமும் செல்வாக்கும் வருவதும் போவதுமா யிருக்கும். ஆனால், இறைவனுடைய அருள் எக்காலத்திலும் ஒரே விதமாகச் சொரிந்துகொண்டேயிருக்கின்றது. புண்ணியவான் பாவி, பணக்காரன் ஏழை, நல்லவன் கெட்டவன், அறிவாளி மூடன், உயர் குலத்தோன், இழிகுலத்தோன் இவையெல்லாம் ஒரே முகத்தின் இரு கன்னங்கள். இறைவனுடைய சந்நிதானத்தில் எல்லாம் ஒரேமுகம், சபா மண்டபத்தில் நின்று சுவாமி தரிசனஞ் செய்வதால் ஏதோ விசேஷமாக ஈசனருள் சொரியப்போவதில்லை. கோபுர வாசலுக்கப்பால் வணங்கிறவனுஞ் சரி, பலிபீடத்துக்கப்பால் நின்று பிரார்த்திப்பவனுஞ் சரி, மெய்யடியார்கள் சுவாமி சந்நிதானத்தில் தங்களுக்கெனப் பிரத்தியேகமான ஆசனம் அமர்த்திக் கொள்ள விரும்பார்கள். மூலஸ்தான மொன்றையே கண்டுகொண்டு நின்று பிரார்த்தனை செய்யும்போ

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். சர்வதாரி ஞூ மார்கழி மீ உகஉ செவ்வாய்க்கிழமை


## தெய்வத்தில் நம்பிக்கை

ஒன்றேன் றிருதெய்வம் உண்டேன் றிருஉயர் செல்வமெல்லாம்
அன்றேன் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றேன் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
யென்றேன் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே.

தெய்வமொன்றுண்டு, நாம் சமய முறைப்படி யொழுகினல் அத்தெய்வம் அருள் புரிந்து நம்மை ஈடேற்றும் என்ற கொள்கையை யுடைமையே தெய்வத்தில் நம்பிக்கை வைத்தலாகும். இத் தெய்வ நம்பிக்கை புண்ணிய வசத்தினலேதான் கைகூடுமென்பது பெரியோர் கொள்கை. புண்ணிய வசத்தினற்றனே கிடைக்கும், அப்படியான புண்ணியமிருந்தால்நமக்குத் தெய்வத்தில் நம்பிக்கை யுண்டாகுந்தானே யென்னில், அவ்வாறன புண்ணியம் நம்மிடத்திலுண்டோ இல்லையோ என்பதை நாம் அறிதல் முடியாதாகும்; புண்ணிய வசத்தினல் இறைவனிடத்திற் சிந்தை செல்ல, அவனை வழிபடுதல் முடியு மென்பது, "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்ற வாக்கியத்தினும் பெறப்படும். இத்தவுண்மையை யுத்தேசித்தே "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே" என்று அப்பர் சுவாமிகள் போன்ற மெய்யடியார்கள் தாமும் இறைவனை யிரந்துள்ளனர்.

சிற்சில பொருள்களிலே அவை உண்டோ இல்லையோ நிசமோ பொய்யோ என்று சந்தேகப்படுதலின்றி அவற்றை நாம்நம்பவேண்டும்; அவைகளுட் பிரதானமான சில பின்வருமாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன:

"மந்திரமுந் தேவும்
மருந்துங் குருவருளும்
தந்திரமும் ஞானம்
திருமறையும்—யந்திரமும்
மெய்யேன்னில் மெய்யாய்
விளங்குமே மேதினியிற்
பொய் யேன்னிற் பொய்
யாகிப் போம்."

இங்கே தேவு என்றது தெய்வத்தை; எச்சமய வாதிகளும் தெய்வ மொன் றுண்டென்று விசுவசித்துத் தத்தம் சமயக் கொள்கைகளின்படி வழிபடுவார்களே யொழிய, தெய்வம் உண்டோ இல்லையோ என ஆராய்ந்து உண்டெனக் கண்ட பின்னர்த்தான் அத் தெய்வத்தை வழிபடுவதில்லையாகும். தெய்வ நம்பிக்கை எப்பொழுதுண்டாக வேண்டுமென்று கேட்டால், சின்ன வயசிலே தான் உண்டாதல் வேண்டும்; விரகறியாச் சின்ன வயசிலே தெய்வ நம்பிக்கை எங்ஙனமுண்டாகும், உண்டாமென நம்பியிருத்தல் பொருந்தாதேயெனின், பொருந்தும்; எவ்வாறு? பிள்ளைகள் எக்காலத்திலும் தங்கள் பெற்றார் பெரியார் உற்றார் உபாத்தியாயரென்னு மிவர்களைப் பின்பற்றியே தாங்களும் நடக்கத் தலைப்படுவர். ஆனதனால் ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள பெற்றார் பெரியார் அவ்வக் குடும்பங்களைச் சேர்ந்த சுற்றத்தார், அப் பிள்ளைகளைப் படிப்பிக்கும் உபாத்தியாயர்கள் தெய்வத்தில் நம்பிக்கையும் தெய்வ வழிபாடு சமயவொழுக்கமென்னு மிவைகளும் பூண்டவர்களாக விருப்பின், அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகளும், அவ்வகையான உபாத்தியாயர்களிடத்திற் படிக்கும் பிள்ளைகளும் தெய்வத்தில் நம்பிக்கை, தெய்வ வழிபாடு முதலாஞ் சமய வொழுக்கங்களைத் தாமுங் கைக்கொள்ளா திருத்தல் முடியாதாகும்; அப்படியான குடும்பங்களிற் பிறக்கும் பிள்ளைகட்குச் சிறு வயசிற்றனே தெய்வத்தின் மீது பய பத்தி பாராட்டி நடக்கு மியல்பு உண்டாய்விடும்.

உதாரணமாக ஒன்று எடுத்துக் காட்டுதும்:— ஒரு சிறு குழந்தை காய்ச்சலினற் பீடிக்கப்பட்டுக் கிடக்கின்றதென வைத்துக்கொள்வோம்; அந்த நேரத்திலே அக் குழந்தையின் தகப்பன், சுரநோய்க்கு அபத்தியமான மாம்பழத்தை வாங்கிக் கொண்டுவர, அக்குழந்தை கண்டு அதனைத் தனக்குத் தின்னத் தரும்படி கேட்டு அழுகிறதெனவும் வைத்துக் கொள்வோம்; பெரும்பாலும் நோய்வாய்ப்பட்டுக் கிடப்போர்க்கு அந்நோய்க்கு அபத்தியமான பண்டத்தில் இச்சை யுண்டாதல் இயல் பென்பர். மாம்பழம் சுரநோய்க்கு அபத்தியமாயிற்றே, உண்ணக் கொடுத்தால் நோய் அதிகப்படுமே யென்ற காரணங்களை யெல்லாம் அந்தப் பிதா தன் குழந்தைக்குச் சொல்லி அக்குழந்தையைச் சமாதானப்படுத்தல் முடியாதெனலாம். ஆனல், தெய்வ நம்பிக்கை சமயவொழுக்கத்தோடு வாழும் பெற்றார்கள், அக்குழந்தை மாம்பழத்தில் அந்நேரங்கொண்ட ஆசையை ஒழியச் செய்வதற்கான ஒரு உபாயத்தை அறிவர்; என்ன உபாயம்? வேறொன்றுமல்ல, "இந்த மாம்பழத்தைச் சுவாமிக்கென்று வாங்கிக்கொண்டு வந்தேன்; எங்கள் குலதெய்வமாகிய பிள்ளையாருக்குப் படைத்தபின் உனக்குத்தானே தருவேன்" என்று அப்பர் சமாதானஞ் சொன்னல், அதனைக்கேட்டு அழுதகுழந்தை வாய்மூடிச் சமாதானப்படும்; ஆனல் தெய்வத்தில் நம்பிக்கை சமயவொழுக்கமென்னு மிவைகளில்லாக் குடும்பத்திற் பிறந்த குழந்தைக்கு இச்சமாதானங் காதில் ஏறுது.

இவைகளை யெல்லாம் எதற்காக எடுத்துக் காட்டுகின்றோமெனிற் பெற்றார் பெரியார் உபாத்தியாயரென்னு மிவர்களிடத்திலே தெய்வபத்தி சமயக்கோட்பாடு என்னு மிவைகள் தவருமலிருப்பிற்றன் பிள்ளைகள் முதலாஞ் சிறியவர்களும் அவர்களைப் பின்பற்றித் தெய்வநம்பிக்கை வழிபாடென்னு மிவைகளைக் கைக்கொண்டொழுகுவ ரென்பதற்கேயாம். இங்ஙனம் சின்னவயசிலே கொண்ட தெய்வநம்பிக்கை சமயவொழுக்கம், காலகதியில் அப்பிள்ளைகளிடத்தில், கல்வியறிவு வளரவளர, விருத்தியாகும்; இங்ஙனம் வளர்ந்து விருத்தியடையவே இறைவனருளும் வந்துகூட, அப்படிப்பட்ட மக்களின் வாழ்க்கை தெய்வபத்தி சமயவொழுக்கமென்னு மிவற்ருேடுகூடிய தூய வாழ்க்கையாகும்; சின்னவயசிற்றனே யுண்டான தெய்வக் கொள்கையும் சமயவொழுக்கமும் பெரும்பாலும் ஸ்திரமாகவுள்ளனவாகும்.

## சமயக் கல்வியின் அவசியம்

### மகாநாட்டில் தீர்மானங்கள்

சைவப் பாடசாலைகளில் சமயக்கல்வி வருந்தத்தக்க முறையில் கைவிடப்பட்டுவிட்டதென்றும், இதை நிவிர்த்தி செய்ய வேண்டியயத்தனங்கள் செய்ய வேண்டும் என்றும் சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் சமயக்கல்வி பற்றிய ஆலோசனை மகாநாட்டில் தலைமைவகித்தபோது கூறினர்.

மேற்படி மகாநாடு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்வித்தியாசாலை மண்டபத்தில் சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் ஆதரவின்கீழ் நடைபெற்றது.

திருவாளர்கள்:

மு. ஞானப்பிரகாசம், எஸ்.யு. சோமசேகரம், எல். இராஜரத்தினம், வி. எம். இராமச்சந்திரன் செட்டியார் ஆகியோரும் வேறு பலரும் பாடசாலைகளில் சமயக்கல்வியின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன,

1. சைவப் பிள்ளைகள் அதிகமாகப் படிக்கும் அரசினர் பாடசாலைகளில் தலைமை யாசிரியர் சைவனுகவும் சமய பாடம் படிப்பிக்கும் ஆசிரியர்கள் சைவராகவும் இருக்கவேண்டும்.
(பிரேரிப்பவர் மு. மயில்வாகனம்)
(அநுவதிப்பவர் த. பொன்னம்பலம்)

2. இலங்கை சிவில் சேர்விஸ் பரீட்சையிலே சைவசித்தாந்தம் ஒரு பாடமாக விதிக்கப்படல வேண்டும்.

3 சமயபாடம் ஆசிரியர் பயிற்சிக் கழகங்களில் கட்டாயபாடமாகச் சேர்க்கப்படவேண்டும்,
(பிரேரிப்பவர் சு. வைரவநாதன்)
(அநுவதிப்பவர் T. ராமசாமி)

4. எல்லாப் பாடசாலைகளிலும் அதிகாரிகளுடைய சமயம் அச்சமயப் பிள்ளைகளுக்கு கட்டாய பாடமாக வேண்டும்.
(பிரேரிப்பவர் V. சங்கரப்பிள்ளை)
(அனுவதிப்பவர் அ. சிற்றம்பலம்)

5. வித்தியாசாலைகளில்சமயபாடம் படிப்பித்தற்குரிய பாடத்திட்டத்தை அமைப்பதற்கு ஓர் உப சபை நிறுவவேண்டுமெனவும் அத்திட்டத்திற்கமைவாக சமயபாடப்புத்தகங்களை எழுதி உதவும்படி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையைக் கேட்டுக்கொள்ளவேண்டுமெனவும் இச்சபை அபிப்பிராயப்படுகின்றது.
(பிரேரிப்பவர் செ. சின்னத்துரை)
(அனுவதிப்பவர் சி. குலரத்தினம்)

6 சமய பாடத்திற்கு முதன்மை கொடுப்பதற்கும் அதனை மற்றைப் பாடங்களோடொப்பத் தகுதியாக்குவதற்கும் ஏனைய பாடங்கள்போல அரசாங்க வித்தியாதரிசிமார்மூலம் பரீட்சை நடத்துவதற்கு வித்தியாபகுதியார் ஒழுங்கு செய்ய வேண்டும்,
(பிரேரிப்பவர் க. கி. நடராஜன்)
(அனுவதிப்பவர் மு. ஞானப்பிரகாசம்)

7. பாடசாலை மனேசர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைத்து விவேகானந்த சபையார் நடத்தும் பரீட்சைகளில் பங்குபற்ற எல்லாப் பாடசாலைகளும் முன்வரவேண்டுமென்று இம் மகாசபை கேட்டுக்கொள்ளுகின்றது.

இப்பரீட்சையில் மாணவர்களை நன்கு பயிற்றுவதற்காக சைவப்புலவர் தேர்வுகளில் ஆசிரியர்கள் பங்குபற்ற வேண்டுமெனவும் இவற்றில் சித்தி எய்திய ஆசிரியர்களுக்கு வித்தியாபகுதியார் பண்டிதபரீட்சையிற் சித்தியெய்தியவர்களுக்கு அளிக்கும் சலுகைகள் போன்ற உதவிகள் செய்யவேண்டுமென்றும் இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது,
(பிரேரிப்பவர் ச. சுப்பையா)
(அநுவதிப்பவர் மு. சதாசிவம்)

## எமது கலை நிலையம்

### மாலைக்குமாலை

ஆசிரியர்: யாழ்ப்பாணன்
பிரசுரம்; இந்தியாவில் சக்தி காரியாலயம், சென்னை—14
இலங்கையில் வடஇலங்காபுத்தகசாலை பருத்தித்துறை.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் தாம் இந்நூலுக்கு அளித்துள்ள முன்னுரையில் சொல்வது போல, "கலைவாணியின் அருட்பொழிவினல் செழுமையுற்ற உள்ளத்தில் ஊற்றெடுத்துத் தங்குதடையின்றிச் சுரந்து பாயும்" கவிதைகளைக் கொண்ட 'யாழ்ப்பாணன்' அவர்களின் "மாலைக்குமாலை" என்னும் கவிதைத்தொகுதி "தமிழகத்தில் ஒரு புத்தொளியை வீசி அனைவரையும் மகிழ்விக்கும்" எனவே எண்ணுகிறோம்.

'இலக்கணங் கற்றே னல்லன்' என்று ஆசிரியர் அவையடக்கங்கூறி, பராசக்தியின் அருளை வேட்டலோடு சக்தியின் இருப்பிடமுந் தேடி, 'மாலைக்குமாலை' யைச் சமர்ப்பித்து, 'மாலைக்குமாலை தந்தேன், வையத்திலின்பங் கண்டேன்" என்று கூறி மகிழ்கிறார்.

மொழி, வாழ்த்து, காட்சிகள், பாலர் கீதம், நீதி, கண்ணன், இதயத்துடிப்பு என்னும் அமைவுகளின் கீழே, இலகுவான சொற்களைப் பிணைத்து, புத்தம் புதிய பொருள்தோன்ற, உயரிய எண்ணக் கருத்துக்களோடு ஐம்பதுக்கதிகமான கவிதைகளை மாலையாக்கித் தமிழ்நாட்டுக்களித்த 'யாழ்ப்பாணன்' அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது.

நாமக்கல் கவிஞர், டி. கே. ஸி முதலிய பேரறிஞரின் நல்லுரைகளே நூலின் பெருமைக்குச் சாட்சிசொல்லும்.

இடையிடையே உத்தமமான படங்களோடு நூல் மிக அழகாக அச்சிடப்பெற்றுள்ளது. அழகிய முகப்புப் படத்தோடுகூடிய இந்நூலுக்கு 'இரண்டரை ரூபா அதிகம்'என்று எவருமே சொல்ல மாட்டார்கள்.

"மாலைக்குமாலை மிக அழகு" என்று அதற்கு ஒரு மாலை சூட்ட விரும்புகிறோம். —இராஜநாயகன்.

○

### விவேகானந்த திருக்குறட்கலண்டர்

1949-ம் ஆண்டுக்குரிய "விவேகானந்த திருக்குறட் கலண்டர்" பிரதி ஒன்று வரப்பெற்றோம். இக்கலண்டர் பெரிய பிரமாணத்தில் தெய்வங்களினதும் தேசியத் தலைவர்களினதும் பல வர்ணப்படங்களை முகப்பில் கொண்டுளது. தினத்தேதித் தாள்கள் ஆங்கில, தமிழ், இஸ்லாமிய தேதிகளையும், திதி, நக்ஷத்திரம், யோகம் முதலானவற்றையும் கொண்டுள்ளன. இலங்கையிலுள்ள பல மதத்தினர்க்குமுரிய விசேஷதினங்களும், அரசாங்க-வங்கி விடுமுறைகளும், தேவோற்சவங்களும், நாயன்மார் குருபூசைகளும், சமுகூர்த்தங்களும் இனிது குறிக்கப்பெற்றுள்ளன. இதனை உபயோகிப்போர் தினமும் பாராயணம் செய்யக்கூடியதாக ஒவ்வொரு தினத்தாளிலும் ஒவ்வொரு திருக்குறள் சேர்த்துளது. பஞ்சாங்கத்தில் பார்த்தறியவேண்டிய விஷயங்களில் பெரும்பாலானவற்றை இதிலிருந்து அறியலாம். இது யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சியந்திரசாலை—புத்தகசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டது. பிரதி ஒன்றின் விலை 1 ரூபா 50 சதம். பெற விரும்புவோர் யாழ்ப்பாணம் பெரிய கடை, விவேகானந்த புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

○

### கோவைகிழார் ம. இராமச்சந்திரனர் வாழ்க்கை வரலாறு

(பிரசுரித்தோர் : கோவைத் தமிழ்ச்சங்கத்தார்)

'தமிழ்நாட்டில் பிறந்த, தம் வாழ்க்கையில் எப்பொழுதும் தமிழையும் சமயத்தையும் பேணிய ஒரு தமிழ் அறிஞர்'என்று போற்றப்படும் கோவைகிழார்— ம. இராமச்சந்திரனர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் விசேஷ அம்சங்களைச் சேர்த்துக்கோவையாக்கிக் கோவைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டுள்ளார்கள். பாஷைக்கும் சமயத்துக்கும் தொண்டாற்றும் பெரியார்கள் அருகிவரும் இக்காலத்தில் கோவைகிழார் போன்ருரின் தம் நலமற்ற சேவையே நமக்குஉயிரளித்துக்கொண்டிருக்கிறது. அத்தகையாரின் வாழ்க்கை வரலாற்றை, அன்னரின் அறுபதாண்டு நிறைவு விழாவின்போது, ஞாபக மலராக வெளியிட்ட மேடி சங்கத்தாரின் முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது. அவர்கள் தம் முன்னுரையில் சொல்வது போல, பொதுமக்கள் இதனைப் படித்து இதில் கண்ட செய்திகளை ஒரு சிறிது அறிந்து கொண்டாலே இந்நூல் வெளிவிட்டதினல் பயன் ஏற்படும் என்பது எமது அபிப்பிராயம்.

○

## "ஒத்துழைப்போம்"

### ஸ்ரீராஜாஜியின் வாழ்த்து

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பியுள்ள புதுவருஷ வாழ்த்துச் செய்தியில் இந்திய கவர்னர் ஜெனரலான ஸ்ரீராஜாஜி, "இந்தியாவினதும் எனதும் மனப்பூர்வமான வாழ்த்துக்கள் உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் உரியதாகும். இப் புது வருஷம் உங்களையும் எங்களையும் ஒன்றுபடுத்தி வைக்கட்டும். நாமும்ஒத்துழைப்போம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

### சபாஷணச் சிங்களம் (2-ம் புத்தகம்)

[ஆக்கியோன் : உணவட்டுனே சுவாமி தூணரத்ன, ஸ்கந்தவரோதயக் கல்லூரி; வெளியிட்டோர் : T. H. பியதாச டிசில்வா, கொழும்பு. விலை சதம் 80]

இந்த இரண்டாம் புத்தகத்தில் சிங்கள லிபி முழுவதற்கும் அதற்குச் சமமான தமிழ் எழுத்துக்களும், தமிழ் எழுத்துக்குச்சமமான சிங்கள அக்ஷரங்களும், கொடுக்கப்பட் டிருக்கின்றன. பாடங்கள் ஒவ்வொன்றிலும் சிங்கள வசனங்களும், அவற்றைத் தமிழில் உச்சரிக்கும் மாதிரியும், அவற்றின் தமிழாக்கமும் தரப்பட்டிருக்கின்றன. ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கதேயாகும், சிங்களம் கற்கபுகும் தமிழ் மாணவர்களுக்கு இப் புத்தகம் அத்துணைப் பயனளிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

○

### ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப்பகுதி வெளியீடு
விலை சதம் 15.

இலங்கை அரசாங்கச் சமாச்சாரப் பகுதியாரால் பிரசுரிக்கப்பட்ட 'ஸ்ரீ லங்கா' வின் முதல் பிரதி, அப் பகுதியாரின் முக்கிய நோக்கத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றுவது கருதி வெளிவந்துள்ளது. இலங்கையின் குடியேற்றம், விவசாயம், பொருளாதாரம் கலை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகளை இதுகாலத்துக்குக் காலம் தாங்கி வெளிவரும் என்பதை அறிய மகிழ்ச்சியடைகிறோம். புகைப்படங்களும் விளக்கப்படங்களும் வெளியீட்டிற்கு அழகு செய்கின்றன. பொது ஜனங்கள் அவசியம் வாங்கிப் படிக்கவேண்டும்.

மேடி நூல்களின் பிரதிகளை எமது பார்வைக்கனுப்பிய அன்பர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

## :: வானவில் ::

● கலாமந்த்ரன் ●

○ நீல்லாம் எல்லாருக்கும் எப்பொழுதும் பொருந்தி வராது. ஆனல் ஒவ்வொன்று ஒவ்வொருவருக்கு, ஒவ்வொரு சமயத்தில் மிக மேலாகப் பொருந்தி விடுகிறது. காற்றோடு காற்றாய் அலைந்து திரியும் ஒலி அலைகளைக் கேட்டுப்பாருங்கள்!

○ உஸ்! நாற்பத்தெட்டே போய் விட்டாயா? போ, போ, திரும்பிப் பாராமல் போ. உன்னுல் எங்களுக்கெல்லாம் எவ்வளவு கஷ்டங்கள்! எங்கள் தந்தையை, உலகத்தின் ரத்னத்தை, மகாத்மாவை எங்களிடமிருந்து பிரித்துவிட்டாய். ஹைதராபாத்திலும் காஷ்மீரத்திலும் நைஜாம் போன்றவர்களின் துருப்பிடித்த மனப்பண்பிலே வகுப்புத் துவேஷமாகி நின்று, ஏழை மக்களை எத்தனை இன்னல்களுக்குட்படுத்தினுய்! நீ செய்த கஷ்டத்துக்கு ஈடுசெய்ய இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் செல்லுமோ அறியோம். புத்தாண்டே, நீ புதுமையுடன் வந்து நமக்குப் பொலிவு தருவாய் என வாழ்த்தி உனை வரவேற்கிறோம்.

இது இந்தியாவின் குரல்.

○ நான் பெரிய ஒரு பிரமுகரோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனுலும் ஊரில் நான் ஒரு பெரிய; பெண்ணு மபெரிய பிரமுகர் என்றே பேசிக்கொள்ளுகிறார்கள். இது மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் காதுகளுக்கும் எட்டிவிட்டது போலிருக்கிறது. அவர் எனக்குப் புது வருஷத்தை முன்னிட்டு ஒரு பட்டத்தைத் தூக்கி வழங்குவார் என்று பத்திரிகைகளும் ரகசியமாகப் பேசுகின்றன. ஆனுலும் இந்தத் தொலைந்துபோகிற டிஸெம்பர் முப்பத்தொன்று போகமாட்டேன் என்கிறதே! சி என்ன வாழ்க்கை?

இது புதுவருடப் பட்டம்பெறப் பரிபக்குவம் அடைந்த ஒரு பிரமுகரின் மனப்பேச்சு.

○ வந்தாயா, புத்தாண்டே வா, உனக்கு நான் நன்றிசெலுத்த வேண்டும். ஆயிரக் கணக்கில் என் போன்றவர்கள் தெருக்களிலே அலைந்து திரிந்ததைக்கண்டு அவர்களை உய்விக்க என்றுதான் நீ வந்திருக்கிருய்; இல்லை என்ருல் நீ வந்ததும் வராததுமாய் எனக்கு அரசாங்கத்தில் ஒரு 'கிளர்க்' — 'உபகாரச் சம்பளமுள்ள' பதவியைப் பிடித்துக்கொடுப்பாயா? உன் தயவினுல்தான் நானும் என் மனைவி மக்களும் வாழப்போகிறோம். நீ வாழ்க!

இது, பலவருஷம் வேலைபற்றிருந்து, புது வருஷத்தோடு உத்தியோகம் பெற்ற ஒரு வாலிபரின் தோத்திரம்.

○ உலகம் முழுவதும் புகழுகிறது தான். ஆனுலும் அந்தப் பந்தையும் மட்டையையும் பிடித்து அடித்துப் பிரமாதமாக என்ன சுகத்தைத்தான் கண்டுவிட்டேனா என்று அழுதை அழுதையாகத்தான் இருந்தது. இங்கிலாந்தில் எல்லா ஆட்டத்திலும் ஜயம் பெற்றுப் புகழ் பெற்றும் பிரயோசனமென்ன என்றுதான் எண்ணமாக இருந்தது. ஆனுலும் உலகம் என்ன அத்தனை முட்டாளா? அதற்கு உண்மையும் விளங்குமுள்ளவர்களைக் கண்டுபிடிக்கவா தெரியாது? அது கண்டுகொண்டது! அது மன்னர் பிரான் மூலமாகப் புதுவருஷத்தை முன்னிட்டு ஒரு 'ஸேர்'பட்டத்தை எனக்குத் தந்திருக்கிறது! சபாஷ்!

இது உலகப் புகழ்பெற்ற கிரிக்கட் விளையாட்டுக்காரரான டொன் பிராட்மனின் இதயப்பூரிப்பின்ஒலி.

○ கலிகாலம் என்பது உண்மைதான். மனிதனை மனிதனுக மதிக்கத் தெரியாத உலகம் இது. இத்தனை வருஷமாக உலகத்துக்காக எவ்வளவு பாடுபட்டேன்! கண்திசெட்ட மனிதன்; அவன் இன்னுமே கண் திறக்கவில்லைப் போலிருக்கிறது. கண்ணுள்ளவனென்ருல் எனக்கும் புது வருஷத்தில ஒரு பட்டம் வழங்கிக் கௌரவிக்கமாட்டானு?

இது பட்டத்தை எதிர்பார்த்து அது கிடைக்கப்பெருத ஒரு 'ஜனாசவத வாதி'யின் கூக்குரல்.

○ அடடே, இன்னும் எத்தனை வருஷங்கள்? நாற்பத்தெட்டுப் போய்விட்டது. இனி நாற்பத்தொன்பது, ஐம்பது........ஆமாம், வாலையும் தலையையும் கழித்து இன்னும் இரண்டு வருஷங்கள்! வரட்டும். நரி — காகம் — விலாங்கு — வௌவால் எல்லாரையும் ஒருகை பார்த்துவிடுகிறேன். யாருடைய கை நீளம் என்பதும் தெரிந்துவிடும். பெரிய பையோடு இரண்டு சட்டைகள் தைக்க வேண்டுமே!

இது, 'இலெக்ஷன் தொண்டர்' ஒருவரின் சிந்தனையிலிருந்து பிறந்த ஒலி.

# கந்தபுராணக்கவி நுட்பம்

## விடைபெறு படலம்

[வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள்வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும்பெருங் குறிப்புக்கள்இப்[ ]பகரக்குறியிட்டுடன்வெளியிடப்பட்டுள்ளன.]

பெருமை கொண்டிடு தெண்டிரைப் பாற்கடல் பெற்றுத்
திரு ம..ந்தையை யன்புடன் வளர்த்திடுந் திறம்போற்
பொருவில் சீருடை யடலயி ராவதம் போற்ற
வரிசை தன்னுட னிருந்தனள் தெய்வத மடந்தை

மேன்மை பொருந்திய வெள்ளிய நிறமையுடைய பாற்கடலானது இலக்குமியைத் தன்னிடத்துப் பெற்று அன்புடன் வளர்த்திடு மியல்புபோல, சமானமில்லாத சிறப்போடும் வலியோடுங் கூடிய ஐராவதமென்னும் யானைவளர்த்த,தெய்வயானைபாகியகன்னிகை(சகல) உபசாரங்களோடும் அதனிடம் இருந்தார் என்பது கருத்து.

பாற்கடல் திருமாலுக்கு உறைவிடமாதலாலும், இலக்குமி சங்கநிதி பதுமநிதி முதலாஞ் செல்வங்களைப் பயந்தமையினாலும் பெருமையுற்றுள்ள தாகலிற் "பெருமை கொண்டிடு பாற்கட"லென்றார். பாற்கடல் வெண்ணிறமுடைய ஐராவதத்திற்கு உவமையாக, திருமடந்தை பொழுகோடுஞ் சகல செல்வங்களோடுங் கூடிய தெய்வத மடந்தைக்கு ஒப்பாகச் சொல்லப்பட்டா ரெனக.

[சுவர்க்கத்திற் பானுகோபனுடன் பொருது, அவனைத் தன் கோடுகள் முறியத் தாக்கிய போராற்றலை யுடைமையின் "பொருவில் சீருடையயிராவதம்" என்றார்.] (11)

முற்று ணர்ந்திடு சுந்தரி யென்பவள் முருகன்
சொற்ற தன்மையை யுளங்கொடு தொண்டைநன் னாட்டில்
உற்ற வள்ளியஞ் சிலம்பினை நோக்கியாங் குறையும்
நற்ற வச்சிவ முனிமக ளாகவே நடந்தாள்

முருகக் கடவுள் தமக்குச் சொல்லி யருளியவை முழுவதையும் விளங்கிக்கொண்ட சுந்தரவல்லி யென்னும் பெண், அந் முருகக்கடவுள் தமக்குப் பணித்த கட்டளையை உள்ளத்தில் வைத்து, சிறந்த தொண்டை மண்டலத்திலுள்ள வள்ளிமலையை நோக்கிப் புறப்பட்டு, அம்மலைச்சாரலிலே தவஞ் செய்து கொண்டிருக்கும் மேலான தவத்தையுடைய சிவமுனிவருக்குப் பிள்ளையாகும் வண்ணம் (அங்குச்) செல்வாராயினர் என்பது கருத்து.

"முருகன் சொற்ற தன்மை" என்றது "சுந்தரிப் பெயரினையவள் தொல்புவி தன்னில் - அந்தண்மாமுனி புதல்வியாய் வேடர்பாலமர்தி" என்றதை யென்க.

[முற்றுணர்ந்திடு சுந்தரி - சுப்பிரமணியக்கடவுள் கூறியருளிய விஷயம முழுவதையு முணர்ந்த சுந்தரவல்லி; இவ்வாறன்றிச் சுப்பிரமணியக் கடவுளுக்கு இச்சாசத்தியாதலால் எல்லாவற்றையு முணர்ந்த சுந்தரவல்லி யென்றல் இங்கே பொருந்தாது. சான்றோருடைத் தாதலின் "தொண்டை நன்னாடு" என்றார். இங்கே அமிர்தவல்லியின் வரலாற்றை விரித்துக்கூறிய ஆசிரியர், நற்றவச் சிவமுனி மகளாகவே நடந்தாள்" என்று மாத்திரஞ் சுருக்கிக் கூறிய தென்னையோ வெனின், இவரது வரலாறு பின்னர் வள்ளியம்மை திருமணப்படலத்தில் விரித்துக் கூறப்படுதல்பற்றி யென்க; ஈண்டுங் கூறின் புனருத்தி யென்னுங் குற்றத்தின்பாற்படுமென வஞ்சி யொழித்தார்.] (12)

ஏந்த வண்ணமிவ் விருவர்க்கும் வரத்தினை யீந்து
கந்த மால்வரை யேகியே கருணையோ டிருந்தான்
தந்தை யில்லதோர் தலைவனைத் தாதையாய்ப் பெற்று
முந்து பற்பக லுலகெலாம் படைத்ததோர் முதல்வன்

தமக்குப் பிதாவில்லாதவராகிய பரமசிவனைப் பிதாவாகக்கொண்டு முன்னர்ப் பலகாலம் உலகங்களெல்லாவற்றையும் படைத்த முழுமுதற் கடவுளாகிய முருகமூர்த்தி, மேலே சொல்லப்பட்ட பிரகாரம் இவ்விரு கன்னியர்க்கும் இங்ஙனம் வரமருளிக் கந்தகிரியை யடைந்து திருவருளோடு எழுந்தருளினர் என்பது கருத்து.

தந்தையில்லதோர் தலைவனைத் தாதையாய்ப் பெற்று என்பதனால், அவதார முறையினாலே தலைவனை (பரமசிவனை)த் தாதையாகக் கொண்டாரென்பதும், மைந்தனென்னுந் "முதல்வன்" என்றமையினால் சிவனே இறைவன், இறைவனே சிவன் என அபேதமாகக் கொள்ளவேண்டு மென்பதுவும் பெற்றாம். பற்பகல் - பலபகல், இங்கே பகலென்றது, சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்களுக்குரிய பகலையுமன்று, இந்திரன் முதலாம் இமையவர்க்குரிய பகலையுமன்று; இரண்டாயிரஞ் சதுர்யுகங் கொண்ட காலமே பிரமதேவருக்குரிய ஒரு நாளாகும், அந்த நாட்கள் பலவாக என்பார் "பற்பகல்" என்றாரென்க.

[இங்கே விடைபெறு படல மென்றதற் கிருகாரணங்க ளுண்டு; ஒன்று சுப்பிரமணியப் பெருமான் தமது சத்திமார் சரவண வாவியிலிருந்து தவஞ் செய்தபோது, இந்திரனிடத்திலும் வேடுவரிடத்திலும் முறையே சென்று புதல்வியராயிருந்து வளர்கிர் என விடை கொடுத்ததாகும். மற்றையது ஞானதியோரைச் சம்மாரஞ் செய்யும்படி சிவபிரான் முருகவேளுக்கு விடை கொடுக்க அவர் விடை பெற்றுச் சென்றதாகும். இதுவே இப்படலத்தில் மேலே சொல்லப்படுவதாம்.] (13)

## புதுவருடப் பட்டங்கள்

### ஸ்ரீ அ. மகாதேவா 'ஸேர்' ஆகிறார்

புது வருட தினத்தை முன்னிட்டு மன்னர் பிரான் உள்நாட்டு மந்திரியாயிருந்த ஸ்ரீ அ. மகாதேவா அவர்களுக்கு ஸேர் பட்டம் வழங்கியுள்ளார், இவ்வருடம் இலங்கையில் இவர் ஒருவருக்கு மட்டுமே இப்பட்டம் கிடைத்திருக்கிறது.

வெளிநாட்டிலாகாவின் நிரந்தரக் காரியதரிசியான திரு கே. வைத்தியநாதனுக்கு ஸி. பி. ஈ. பட்டமும், யாழ்ப்பாணத்துப் பிரமுகர்களான திருவாளர்கள் ஆர். ஆர். நல்லையாவுக்கும் ஸி. ஆர் தம்பையாவுக்கும் ஓ பி இ. பட்டமும் கிடைத்துள்ளன. இலங்கையில் இன்னும் பல பிரமுகர்களும் புதுவருடக் கௌரவப்பட்டங்களை பெறுகிறார்கள்.

பிரபலமான 'கிரிக்கெட்' விளையாட்டுக்காரரான டொன்பிராட்மன் அவர்களுக்கும் ஸேர் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

## அருளிலார்க் கிவ்வுலகுமில்லை

(1ம் பக்கத் தொடர்ச்சி

ழுமு தங்களின் பக்கத்தில் கிற்போரின் கிளைவே அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியார்கள சுவாமி சந்நிதானம் எப்பொழுதும் பரிசுத்தமானது. அதை ஒருவரும் அசுத்தப்படுத்த முடியாது. எவ்வித அசுத்தத்தையும் அது பரிசுத்தமாக்கக்கூடியது. அதை எக்குலத்தினரும் தீண்டமுடியாது. எல்லாரிலும் தெய்வமுண்டு. நாம் வணங்கும் தெய்வமும் அத்தெய்வமுமொன்று.

......அங்கமெலாங் குறைந்தழுகு
தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்
கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்குங்
கடவுளாரே.'

—சிவதொண்டன்

## திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

**புதன் ஜனவரி 5**

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருக்கோடிகாவல் ஆர். கோவிந்தராஜ பிள்ளை பாட்டு 8.00 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புல்லாங்குழல்* 8 30 திருத்தாங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 9 முடிவு.

1 சுதம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 திருத்தாங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 திருத்தாங்கூர் ஆர் செல்லப்பா பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 கும்பகோணம் டி. எஸ். சம்பந்தம் பிள்ளை வயலின் 5 40 இசை பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வெற்றியின் விளைவு நாடகம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 சோறு படைத்தது வி. எஸ். தியாகராஜ முதலியார் பேச்சு 8 திருக்கோடிகாவல் ஆர். கோவிந்தராஜ பிள்ளை பாட்டு 8 30 கும்பகோணம் டி. எஸ். சம்பந்தம்பிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாதஸ்வரம் * 9 30 லண்டனிலிருந்து செதிகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 ஜே எம் அப்துல்கனி வீணா 10.00 இசைவேளை* 10 30 முடிவு.

**வியாழன் ஜனவரி 6**

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி. எ. ஞானம்பாள் வீணை 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8 15 காலை இசை* 8 30 ஜீ அம்புசக்கரச பாட்டு 9 முடிவு.

1 சுதம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2.05 கம்பராமாயண பாடல்கள் தேவகோட்டைதமிழ் இசைப்பள்ளி மாணவர்கள் 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கே. வி. சுப்பிரமணியம் பாட்டு 5 40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம்* 7 30 தமிழில்செய்திகள் 7 45 கல்வி முறை: 4 பெண் கல்வி 8 டி. எ. ஞானம்பாள் வீணை 8 15 செம்மை வைத்தியநாத பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 சினிமா மெட்டுகள்* 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள்வானிலை ஆங்கிலம் 9 45 கே வி சுப்ரமணியம் பாட்டு 10 30 முடிவு.

## தேகவியோகம்

டக்டர் சி. கனகரத்தினம்

வண்மேற்கு (சைவப்பிரகாச யந்திரசாலைக்கு அணித்தாகவுள்ள) டக்டர் சி. கனகரத்தினமவர்கள் தம்மைச் சில நாளாகப் பீடித்தநோய் காரணமாக சென்ற வியாழக்கிழமை (30-12-48) இரவு 10½ மணியளவில் தமது மக்கள் உற்றார் உறவினர் துயருற, தமது இல்லத்திற்றானே இவ்வுலக வாழ்வை யொருவினர். இவருக்கு இறக்கும்பொழுது வயசு 85 இவர் ஆங்கில வைத்தியப் பகுதியில் அக்காலத்தில் அப்போதிக்கரிஸ் பரீட்சையிற் சித்தி பெற்று ஏனேனும் காலத்தில் அநுபவமுந் திறமையும் வாய்ந்த ஒரு டக்டராக இந் நல்லா ரெல்லாரும் மதிக்கத் திறமையுடன் வைத்தியம் நடத்திவந்தார். இவருடைய மருந்துச்சாலை பெரியகடைச் செம்மாதெருவிலுள்ளது, மாத்தளை அரசினர் வைத்தியசாலையிற் கடமைபார்க்கும் டக்டர் சிவஞானரத்தினம், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. கந்தசுவாமி, மாத்தளை அரசினர் வைத்தியசாலையிற் கடமைபார்க்கும் "அப்போதிக்கரிஸ்" ப. சிவராசாவின் மனைவி ஸ்ரீமதி சிவகாமசியம்மாளாகிய மூவரும் டக்டர் கனகரத்தின மவர்களின் மக்களாவர். காலங்கண்ட முதியராகிய இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்தநாளாகிய வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிதொடக்கம் வண்மேற்கு கோம்பயன் மணல் மயானத்தில் மக்களிருவராலும் பக்சன சமூகத்தில் விதிப்படி செய்யப்பட்டன, இவருடைய ஆன்மா சாந்தியடைக.

## காலநிலை

ஒருவாரகாலமாக யாழ்ப்பாணப் பகுதியில் மழை பெய்து சில இடங்களில் வெள்ளப்பெருக்குண்டானபின் சென்ற மூன்று தினங்களாக மழை வெளித்திருக்கிறது. இந்த மழை இவ் வடமாகாணத்தில் மாத்திரமல்லாமல், வடமத்தியமாகாணம் கீழ்மாகாணம் முதலிய சில மாகாணங்களிலும் பெய்ததென அறியக்கிடக்கிறது. இன்னும் மழை பெய்யுமானால் பயிருக்கு அழிவு வருமென விவசாயிகள் பயப்படுகின்றனர்.

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு


நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த

ஜெர்மன் "திறப்பு மார்க்கு" சீமெந்து

("KEY BRAND" CEMENT)

இம்மாதத்தில் - -
"INDIAN MERCHANT"
- - கப்பலில்



யாழ்ப்பாணம் - -
துறைமுகத்துகுகு
- - வருகிறது

முன்பு யாழ்ப்பாணத்தில் திறமெனப் பெயர்பெற்ற சீமெந்து

வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில்

விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்

இப்ராஹிம் ஜபர்ஜீ
ஆஸ்பத்திரிரோட் : பெரியகடை
யாழ்ப்பாணர்.

Ibrahim Jafferjee
Hospital Road
Grand Bazaar, Jaffna.

Sid 8 4—1&31—1—49.

## சைவ சித்தாந்த மகா சமாஜம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

தின் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன. சிவலிங்கங்களும், அம்மை கூத்தப் பெருமான் தென்முகக்கடவுள் உருவங்களும் பிறவும் கிடைத்துள்ளன. இவைகளிலிருந்து ஏழே காணும் கொள்கைகளும் ஒழுக்கங்களும் அக்காலத்திலேயே (அதாவது கி. மு. 4000 ஆண்டுக்கு முன்னரே) நிலவியிருந்தனவென்று வகுத்தறியலாம். (1) மக்கள் கடவுளைத் திருவுருவங்களில் வழிபட்டனர். (2) தங்களிடமுள்ள துன்பங்களை நீக்குதற்கே அவ்வாறு வழிபட்டனர். (3) அத்துன்பங்கள் அவ்வழிபாட்டாலன்றி நீங்காதென்று நம்பினர் (4) வழிபாட்டிற்கு அவயவப் பகுப்புடைய கூத்தப்பிரான், தென்முகம், அம்மை முதலிய (Anthropomorphic) உருவங்களும், அவயவப் பகுப்பில்லாமல் கண்ணிற்குப் புலனாகும் அவ்வுருவத் திருமேனியாகிய (Aniconic) சிவலிங்கமும் வழக்கிலிருந்தன. (5) எனவே கடவுளுக்கு உருவ நிலையும் இருவுருவ நிலையும் உண்டென்று நம்பினர். (6) இவ்விரண்டு நிலைகட்கும் மேற்பட்ட அருவ நிலையின் உண்மையும் அவர்கள் அறிந்திருத்தல் கூடும். (7) இவைகளிலிருந்து இறைவனுடைய தடஸ்த லக்ஷணத்தையும் சொரூப லக்ஷணத்தையும் அவர்கள் அறிந்திருக்கலாம். 8) அம்மை வழிபாடும் ஆண் உருவ வழிபாடும் ஒருங்கே காணக் கிடைப்பதால் கடவுளைச் சக்தியாகவும் சக்திமானாகவும் அவர்கள் கருதியிருக்க வேண்டும். (9) சக்திக்கும் சக்தனுக்கும் உள்ள தொடர்பின் தட்பத்தை அவர்கள் அறிந்திருத்தல் கூடும். (10) புலி, மான் முதலிய விலங்குகள் தம்மை மேல்நோக்கி நிறகத் தாம் உட்கார்ந்திருக்கும் உருவம் ஒன்று, கடவுள் பசுபதி என்ற கொள்கையின் உருவப் படமேயாகும் (11) பதுமாசனத்தில் அமர்ந்திருக்கும் ஒரு பெரியார் உருவம் நடுவிலும், முழந்தாளிட்டு வணங்கும் உருவங்களிரண்டு இருபுறமும் காணப்படுவதால், ஒரு குரு சீடர்களுக்கு யோக நுட்பங்களைக் காட்டுமுறை பெறப்படும் (12) நாசிநுனியையே நோக்கியிருக்கும் ஒரு உருவம் அக்காலத்தவர்க்கு யோகப்பயிற்சி யுண்டென்பதை அறிவிக்கும். (13) மக்கள் தங்கள் துன்பத்தை நீக்கிக்கொள்ள உருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு போலவே யோகத்தையும் மேற்கொண்டனர் என்பது அறியப்படும். (14) சரியை கிரியை யோகம் என்ற முறைகளும், இவற்றின் இயற்கைச் சிகர முடிபாகிய ஞானமும் அவர்கள் ஒழுக்கத்திலுள்ள படிகளாயிருந்தன என அறியலாம். (15) குருவின் அவசியம், உபதேசம், சீடரின் பக்குவம், சீடர்க்கு பக்குவம் வரச் செய்யும் தீக்கை முதலியனவும் இவைகளிலிருந்து இயல்பாகவே ஊகிக்கற்பாலன. (16) மறுபிறப்புண்மை, கன்மமலத்தின் உண்மை, கன்மமலத்திலிருந்து விடுபடுதற்கு வழிபாட்டையும் யோகம் முதலியவற்றையும் உபாயங்களாகக் கொள்கை முதலியனவும் பெறப்படுதல் இயல்பே. (17) கூத்தப்பிரான் உருவம் (சிதைந்த நிலையிலேனும்) காணக் கிடைத்தமையால், கடவுளைக் கூத்தனாக வணங்குவதின் நுட்பம், அவன் திருக்கூத்து ஐம்பெருந் தொழில்களை உருவகப்படுத்தி நிற்றல், அவன் நிமித்த காரணனாகி இவற்றை நடத்துதல் முதலியன அறியப்படும். (18) இருபதினாயிரம் சதுர அடிப் பரப்பும் பல பெரிய தூண்களுமுடைய ஒரு பெரிய மண்டபமும் அதனருகில் ஒரு குளமும் காணப்படுவதால், மக்கள் ஒன்றுகூடி வழிபாடு செய்யும் நிலையங்களும் அத்தகைய திருக்கோயில் வழிபாட்டின் கொள்கைகளும் இருந்தமை நன்கு புலனாகும். (19) திருவாசிபுடன் சில உருவங்களும், வாகனத்தைத் தாங்கிச் செல்வதுபோன்ற அமைப்பும் காணப்படுவதால் விழாக்களும் வழிபாட்டின் அங்கங்களாக இருந்தன என்பது புலனாகும். (20) நூற்றுக்கு மேற்பட்ட ரிஷப உருவங்கள் கிடைத்துள்ள படியால் சைவத்துக்கும் இடபத்துக்கும் உள்ள தொடர்பை அக்காலத்தவர் அறிந்திருத்தல் கூடும். இவ்வாறே கூர்ந்து ஆராய்ந்து சென்றால், சைவத்தின் அடிப்படையான கொள்கைகளின் மூல வடிவங்கள் (The formative expression of doctrines) எல்லாம் இப்புதைபொருள்களிலுள்ளன என்றே கூறலாம். இவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டே Sir John Marshall துரைமகனார் சைவசமயத்தின் தொன்மையை முடிவு கட்டியுள்ளார், இப்பொருள்களையெல்லாம் உபயோகித்த பெருமக்கள், ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முந்தியே வாழ்ந்தவர்கள். எனவே ஆரியர் வருகைக்கு முன்பே சைவசமயம் உலகெங்கும் பரவியிருந்ததுபோலவே இந்தியாவிலும் பரவியிருந்தது. ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபிறகு தங்களுடைய உருத்திரனைச் சிவமாக மாற்றிக்கொண்டு, சிவபெருமானை ஏற்றுக்கொண்டனர் என்று பற்பல ஆராய்ச்சியாளர்கள் தக்க ஆதாரங்களோடு கூறுகின்றனர். நுட்ப அறிவுடைய சைவ மக்கள் இதைக் கண்டு ஏமாறவேயில்லை. குணதத்துவத்தின் வைகிப் பிரகிருதி புவனத்தை சங்கரிக்கும் குணிருத்திரனாகவும், பசுவர்க்கத்திற் பிரளயாகலரிற் பக்குவமுடையவனாகவுமே ஆரியர்களுடைய ஸ்ரீகண்ட ருத்திரனைக் கொண்டு, அவனால் அறியப்படாத சதுர்த்தப் பொருளே பரமசிவமெனக் கொண்டனர். 'வரியாய மலராலும் வையம தன்னை உரிதாய அளந்தானும் உள்ளுதற்கங்கரியானும் அறியாத கள்ளிகமேயான்" என்று முதல் திருமுறையில் (1-119-9) ஞானசம்பந்தரும் "மூவராலும் அறிபொணா முதலாய ஆனந்த மூர்த்தியான்" என்று சென்னிப் பத்தில் மாணிக்கவாசகரும் கூறுவதையும், இவற்றோடு வேறு பல பாசுரங்களைக் காட்டிச் சிவஞான சுவாமிகள் சங்காரகாரணனாயுள்ள முதலையே என்று வார்த்திகம் வித்தோதியதை பாபாடியத்தன் முதற் சூத்திரத் தொடக்கத்தின் விளக்கியுள்ளதையும் நோக்குக.

12. வேறொரு வழியிலும் சைவத்தின் தொன்மையை ஆராயலாம். ஒரு சமயத்தின் தத்துவக் கொள்கைகளை, அதிலுள்ள தத்துவ சாத்திரங்கள், தோத்திரங்கள் முதலியவற்றின் துணைகொண்டு ஆராய்வது ஒருமுறை. வேற்றுச் சமயக்கொள்கைகள் மறைவாகப் புகுத்தப்பெற்றன்வன என்று பிறர் இம்முறைக்கொரு குறை கூறலாம். தத்துவக் கொள்கைகள் புதைபொருட்களஞ்சியங்களாக நின்று, ஆராயும்தோறும் ஒளிகாலும் மிகப் பழைய சிறு சொற்களைக்கொண்டே சமய நுட்பங்களையறிவது மற்றொரு முறை. இம்முறையில் மேற் கூறிய குறை நிலைகாட்ட இடமேயில்லை, இம்முறையிலேயே சில சொற்களை ஆராய்ந்து பார்க்கலாம். தமிழ் மொழியிலே, இப்போது கிடைத்துள்ள நூல்களிலெல்லாம் மிகப் பழமையானது தொல்காப்பியம். இதிலுள்ள மூன்று சொற்களைமட்டும் ஆராயலாம். "கடவுள்" என்ற சொல் பொருளதிகாரத்துப் புறத்திணையில் 85-ம் சூத்திரத்திலும் வேறுசில இடங்களிலும் வந்துள்ளது. உயிர், உடம்பு என்ற சொற்கள் பொருளியலில் 200-ம் சூத்திரத்திலும் பிறண்டும் வந்துள்ளன. இம்மூன்று சொற்கள் சைவத்தின் அடிப்படையான கொள்கைகளையெல்லாம் தம்முள் அடக்கிவைத்திருக்கின்றன. இதைப்பற்றியதொரு சிறு கட்டுரை என்னால் எழுதப்பெற்று 1939-ல் இந்துசாதனப் பொன்மலரில் வெளிவந்தது, அதிலுள்ள இரண்டொரு கருத்துக்களை மட்டும் இங்கு தருகிறேன், கடவுள் என்ற சொல், கட, உள் என்று ஒரு கூறுடைத்து. இவை ஏதோ ஒரு பொருளின் கடந்தநிலை உள்ளிருக்கும் நிலைகளை உணர்த்துகின்றது. நமது உலக அனுபவத்தில் இவ்வாறு இருநிலைகளையுடையதொரு பொருளைக்காணமுடியாது. எனவே இப்பொருள் உலகானுபவத்தில் காணக்கிடையாததொரு பொருளாயிருத்தல் வேண்டும். இவ்வாறே சிந்தித்துச் சிந்தித்து ஆராய்ந்து கொண்டே போனால், கடவுளைப்பற்றிச் சைவம் கூறுகின்ற சொரூப தடத்த லக்கணங்கள், எண்குணங்கள், எண்பெரு வடிவங்கள், சிவஞானபோதத்திற் காணப்படும் பதியிலக்கண நுட்பங்களாகிய அனைத்துப் பொருள்களையும் தொகுக்கலாம். சைவசித்தாந்தம்கற்றல் சேட்டனுடையார் பெரியார் துணைகொண்டு முழுக வாங்கிக் கடைந்து தழி, மறையின்றுள்ள மாமணிச் சோதியான் முன்கிற்பன். இவர் துணை பெருத மற்றவர் அரியமாணிக்க மலைபாகவும் இருப்பன். உம்மையே உயிர் என்ற சொல் உய் என்னும் வேரிலிருந்து தோன்றி உய்வது, உய்தற்குரியது, கட்டுண்ட நிலையிலிருந்து உய்வது முதலிய பொருள்களையெல்லாம படிப்படியாகத் தந்து சித்தாந்தம் கூறும் பசுவிலக்கண முழுமையும் உணர்த்துவதோடு பாச இலக்கணத்திற் சிலவற்றையும் குறிப்பிக்கும். "உடம்பு" என்ற சொல் "உடு" என்னும் வேரிற் பிறந்து, உடை, உயிரின் உடை, மாறுவது, அழிவது முதலிய பொருள்களைத் தந்து, பாச இலக்கண நுட்பங்களை விளக்கும். இம் மூன்று சொற்களுக்கு நேராகப் பிற மொழிகளிலுள்ள சொற்கள் எவையும் இவ்வளவு பொருள் செறிந்த கருத்துக்களையெல்லாம் தம்முளடக்கி நிற்பனவாகக் காணப்படவில்லை. (வரும்)

## கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி ரசசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம், கெடுகாட்டப்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும், மேகம் மேகத் தடிப்பு சீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மல சலக்கட்டுநீக்கும். கருவை அழியாமல் காக்கும், பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி,

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற்களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ரூத்தல் விலை ரூப 5-00**

வி. பீ பி. யில் அனுப்புவோம்.
வெளிநாட்டிற்கு வி. பி பி, இல்லை

விலாசம்:

ஆயுர்வேத
சிவசோதி மெடிக்கல்ஸ்டோர்
-- வல்வெட்டித்துறை — செ

Std 23-7—23.7.49.

## நைரேகைகளும் நோய்களும்

உள்ளங்கைகளிலுள்ள ரேகைகளையும் விரல்களிலுள்ள கோடுகளையும் கவனித்துப் பார்ப்பது வெறும் ரேகை சாஸ்திரமாத்திரமன்று, விஞ்ஞானத்துக்கும் இக்கோடுகள உபயோகப்படும் என்பதை நிரூபிக்கலாம் என்று பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர்கள நம்புகின்றனர். இத்துறையில் முதற் பரிசோதனைக்காக ஹெர்போர்ட்ஷையர் பள்ளிக் குழந்தைகளின் கைகளிலும் விரல்களிலும் உள்ள கோடுகளைக்கொண்டு இக்குழந்தைகளிடம் பரம்பரை வியாதிகள இருக்கின்றனவா என்பதை அறிய முயற்சிசெய்யப்பட்டு வருகிறது.

சில பெற்றோர்களின கைகளிலுள்ள கோடுகளும் முகடுகளும் அவர்களது குழந்தைகளின் கைகளிலும் காணப்படுவதால் இவைகள் சில பரம்பரையான வியாதிகளை நிர்ணயஞ் செய்வதற்கு உதவக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். ஏற்கனவேயே சிலகுழந்தைகளின வேறு விதங்களில் கண்டுபிடிக்க முடியாத வியாதிகள் உள்ளங் கைகளைப் பார்த்து சரியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக விவாகமாகப் போகிறவர்களுக்கு இம்முறை மிகவும் உபயோகபடும்.

இவ்விஷயமாக இப்போது நடத்தப்பட்டுவரும் சோதனைகளெலாம் லண்டன் யூனிவர்ஸிடி கல்லூரியிலுள்ள காலடன் ஜெனிடிக்ஸ் ஆராய்ச்சி சாலையின் டைரக்டரான பேராசிரியர், லயனல் பென்ரோஸின் மேற்பார்வையின் கீழ் இருந்து வருகின்றன.

—லோகோபகாரி.

## வயிற்றிலே சாளரம்!

ஒகியோ சர்வகல சாலைச் சேர்ந்த டாக்டர் ஸ்கோக் எனபவர் கால்நடை வளர்ப்பு ஆராய்ச்சிக்குரிய பரிசாகிய ஆயிரம டொலரையும், ஒரு பசுவின் வயிற்றில் சாளரம் ஒன்றினை நேர்த்தியாக அமைத்ததற்காகப் பரிசாகப்பெற்றார். அவர் மிருகத்தின் வயிற்றினுள்ளே எவ்விதம் உணவு ஜீரணமாகிறது என்பது போன்ற விஷயங்களை அவதானிப்பதற்காக ஒரு பசுவின் வயிற்றில் அச்சாளரத்தை அமைத்துவிட்டாராம்.

## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

### இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 00, 000 |

தலைமைக்காரியாலயம்:- பிறின்ஸ்வீதி, கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),வதுளை மட்டக்களப்பு.
யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிரோட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடமொன்றுக்கு 1½ விகிதம் கேட்டபோசம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்: அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டுவ்வகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு.

இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு

Std, 54 1-8-48—30-7-49,

## சலரோகம்

அப்ரக் செந்தூரம் — நைகண்ட மருந்து

புதுக்கோட்டைத் தலைமை வைத்திய அதிகாரியும், சுகாதார உத்தியோகத்தருமாகிய ரூவ்சாகிப் Dr M. G. இராமச்சந்திரராவ் தெரிவிப்பதாவது:

"இம்மருந்தை ஒரு சாய்புவுக்குக் கொடுத்தபோது 15 நாட்களில் நீரிற் சர்க்கரைச் சத்து அறவே நீங்கிவிட்டது."

**20 வேளை 10 நாள் மருந்து ரூபா 10**


தொய்வு இருமல் கசந்துக்கு சொர்ணகல்பம் ¼ தோலா ரூபா 8—50

**Dr. K. S. பரிபூரணநந்தா**
Regd. Medical Practitioner, (Madras)
349, நாவலர் ரோட்டு :: :: யாழ்ப்பாணம்

Std 4 12-11—12-6-49

ஸ்ரீ ரங்கா மியூசிக்கல் வேர்க்ஸ்

## அறிவித்தல்



வயலின், வீணை, ஆர்மோனியர், சுதிப்பெட்டிகளும், இன்னும் பலவிதமான வாத்தியக் கருவிகளும், குறைந்தது மூன்று வருஷ உத்தரவாதத்துடன் புதிதாகச் செய்தும், பழுது பார்த்தும் கொடுக்கக்கூடியதிறமைவாய்ந்த இந்தியத்தொழிலாளர்கள் இருக்கின்றனர்

**ஒருமுறை பரீட்சித்தால் உண்மை விளங்கும்!**

(ஹாஜியார் பில்டிங்)
No. 76/I
கன்னாதிட்டி :: யாழ்ப்பாணம்
(ஆரிய பார்மேஸிக்கருகாமையில்)

இங்ஙனம்
K. C. வேலாயுதம்

M. 187 28-12—18-1-49 (செ)

—தொடர்பான—

## சரித்திரபாடப் புத்தகங்கள்

2-ம், 3-ம், 4-ம், 5-ம், வகுப்புக்குரியன

ஆக்கியோன்

**ச. ஜெயவீரசிங்கம் B. A. (Hons.)**
சரித்திர ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இப்புத்தகங்களை நீங்கள் ஆதரிக்கவேண்டியதற்கு நியாயங்களாவன:

1 வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக்கமையும்படி இப் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.
2 இப் புத்தகங்களில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் வினாக்களும் இருக்கின்றன, ஒவ்வொரு பாடமும் வெகு சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது.
3 உண்மையான சரித்திரமன்றிக் கட்டுக் கதைகள் நீக்கப் பட்டுள்ளன.
4 இப் புத்தகங்கள் இலகுவான நடையிலெழுதப்பட்டன.
5 இப்புத்தகங்களிற் காணப்படும் சிலபாடங்கள் ஆரம்பவகுப்புகளுக்கென எழுதப்பட்ட வேறு புத்தகங்களில் இல்லை.
6 இப் புத்தகங்களின் விலை மிகவும் சகாயமானது. ஆசிரியர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தாராளமான கழிவு கொடுக்கப்படும்.

பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிகளிடமேனும் நூலாசிரியரிடமேனும் பெறற்பாலன.

Std 60 19.10-48—14-1.49, (செவ்,

Printed and Published by S. P. KANDIAH, F. I. S. A. (Lond) residing at 245. Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday January 4, 1949.